**கோயமுத்தூர் முதன்மை மாவட்ட நீதிமன்றம், கோயமுத்தூர்**

**O.S.No.49/2023**

DW - 2

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29 ஆம் செவ்வாய்கிழமை அன்று திருமதி ஜி.விஜயா, B.A.,M.L., PGDCFS முதன்மை மாவட்ட நீதிபதி, கோயமுத்தூர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | ராமச்சந்திரன் |
| கணவர் / தந்தை பெயர் | |
| வயது | |
| முகவரி | |

**முதல் விசாரணை**

நான் சம்மனின் பெயரில் சாட்சியம் அளிக்கிறேன். எனக்கு அனுப்பப்பட்ட சம்மன் எக்ஸிபிட் எக்ஸ்.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தனபால் என்பவர் 15-04-2021 ல் எழுதி வைத்த உயிலை நான் நோட்டரி கையொப்பம் செய்தேன். அது சம்மந்தமாக நான் தற்பொழுது சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 14-04-2021 அன்று மேலே குறிப்பிட்ட உயிலில் முதலாவது சாட்சியாக கையொப்பமிட்ட சுப்பிரமணியம் என்பவர் என்னை அணுகி அவரது நண்பர் தனபால் என்பவர் உயில் எழுதி வைத்திருப்பதாகவும், அதில் நான் நோட்டரி கையெழுத்து செய்யவேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்க நான் 15-04-2021 ல் மேற்சொன்ன சாட்சி என்னை கோவை, சித்தாப்புதூருக்கு எனது அலுவலகத்திலிருந்து அழைத்துச் சென்றார். சித்தாபுதூரில் உயில் எழுதி வைத்த தனபாலின் வீடு உள்ளது. அன்றைய தினம் சுமார் 11 மணி அளவில் காரில் தனபாலின் வீட்டிற்குச் சென்றோம். அங்கு தனபாலும், அவரது இரண்டாவது மனைவி சரஸ்வதியும், உயிலில் இரண்டாவது கையொப்பமிட்ட திவ்யாவும் இருந்தார்கள். மேலும் அங்கு இரண்டு பெண்கள் இருந்தார்கள். ஆனால் அவர்கள் யார் என்று எனக்குத் தெரியாது.

நான் விவரம் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. தனபால் ஏற்கனவே தயாரித்து வைத்திருந்த உயிலை என்னிடம் தந்தார். அதை வாங்கிய நான் தனபாலிடம் உயிலை அவர் படித்துப் பார்த்தாரா என்று கேட்டேன். அவர் உயிலை படித்துப் பார்த்ததாக என்னிடம் கூறினார். தனபாலிடம் நான் முதல் மனைவி மூலம் பிறந்த மகனுக்கு ஏன் பாகம் ஒதுக்கவில்லை என்று கேட்டேன். அதற்கு அவர் எனது மகன் என்னை கவனித்துக் கொள்வதில்லை. அவர் தன்னிச்சையாக வாழ்கிறார். அதனால் அவருக்கு நான் எதுவும் எழுதி வைக்கவில்லை என்று கூறினார். அதன் பின்னர் உயிலின் ஒவ்வொரு பக்கத்திலும் தனபால் என் முன்பாக கையொப்பம் செய்தார். உயிலின் கடைசி பக்கத்தில் தனபால் தனது புகைப்படத்தையும் ஒட்டி அருகில் கையொப்பம் செய்தார். அதன் பின்பு முதல் சாட்சி எம்.சுப்பிரமணியம், த/பெ மருதமலைக் கவுண்டர் என் முன்பாக கையொப்பம் செய்தார். அவர் கையொப்பம் செய்த பின்னர் இரண்டாவது சாட்சியான திவ்யாவும் எனது முன்பாக சாட்சி கையொப்பம் செய்தார். அதன்பின் எனது நோட்டரி ரெஜிஸ்டரில் உயில் ஆவணத்தில் கையெழுத்திட்டதை பதிவு செய்தேன். பின்னர் உயிலில் நோட்டரி ஸ்டாம்பு ஒட்டி, சீல் வைத்து எனது கையொப்பத்தை இட்டேன். உயிலின் ஒவ்வொரு பக்கத்திலும் எனது நோட்டரி சீலை வைத்து கையொப்பம் செய்தேன். பின்னர் உயிலின் கடைசி பக்கத்தில் என்னுடைய புத்தகத்தில் எந்த பக்கத்தில், எந்த சீரியல் நெம்பரில், என்றைக்கு அதைப் பதிவு செய்தேன் என்ற விவரத்தை குறிப்பிட்டு நான் கையொப்பம் செய்துள்ளேன். மேற்படி உயிலில் நான் நோட்டரி கையொப்பம் செய்தேன் என்பதற்கு ஆதாரமாக நோட்டரி சர்டிபிக்கேட் ஒன்றையும் நான் தனபாலுக்கு கொடுத்தேன். எனது புத்தகத்தில் நான் பதிவு செய்த

உயிலின் விவரம் அடங்கிய தாள்களை (Register Extract) தற்போது நீதிமன்றத்தில் ஆவணமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். அது எக்ஸிபிட் எக்ஸ்.2 ஆகும்.

**(பிரதிவாதியின் வழக்கறிஞர் வேண்டுதலின்பேரில் உணவு இடைவேளைக்கு பிறகு குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் 1991 ல் வழக்கறிஞராக பதிவு செய்தேன். 01-03-2019 ல் நான் நோட்டரியாக நியமிக்கப்பட்டேன். எனக்கு பதிவு எண் உள்ளது. அது 67/2019 ஆகும். நோட்டரி பதிவானது எத்தனை ஆண்டுகளுக்கு செல்லும் என்று சொன்னால், ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை அதை புதுப்பிக்கவேண்டும். நான் 2024 ல் எனது பதிவை புதுப்பித்தேன். உயில் எழுதியதாக கூறப்படும் தனபால் எனக்கு பழக்கம் இல்லை. உயிலில் சாட்சி கையொப்பம் செய்த சுப்பிரமணியத்தின்மூலம் தனபாலைத் தெரியும். சுப்பிரமணியத்த்திற்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட ஒரு சிவில் வழக்கில் வேறுஒரு பிரதிவாதிக்காக நான் பொள்ளாச்சி நீதிமன்றத்தில் வழக்கறிஞராக ஆஜராகியுள்ளேன். சுப்பிரமணியம் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்தார். மேற்சொன்ன சுப்பிரமணியம் தற்போது காலமாகி விட்டார். மேற்சொன்ன சுப்பிரமணியத்தின்மூலம் தனபாலை தெரியும் என்று வழக்கிற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு வெளியில் அலுவலகம் இல்லை. நீதிமன்ற வளாகத்தில் உள்ள வழக்கறிஞர்கள் கூடம் அறை எண்.307 ல் நான் கோ அலாட்டியாக இருக்கிறேன். அந்த அறையில்தான் நான் அலுவலகம் நடத்தி வருகிறேன். சுப்பிரமணி என்னை எனது அலுவலகத்தில் வைத்துத்தான் பார்த்தார். என்னுடைய நோட்டரி சீலில் எனது வீட்டு

விலாசம்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். காரணம் எனக்கு அனுப்பப்பட்ட அரசாணையில் அந்த முகவரிதான் குறிப்பிடப்பட்டுள்ளது. என் முன்பாக தனபால் என்று கூறி கையொப்பம் செய்த நபரின் அடையாள அட்டை ஏதேனும் நான் பார்த்தேனா என்றால், நான் பார்க்கவில்லை. உயிலில் அவரது அடையாள ஆவணங்கள் எதையும் இணைக்கவில்லை. உயில் யார், எங்கு வைத்து, எப்பொழுது தயாரித்தார்கள் என்ற விவரம் எனக்குத் தெரியாது. உயிலில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து சம்மந்தப்பட்ட அசல் ஆவணங்களை நான் பார்க்கவில்லை. உயிலில் கண்டுள்ள சொத்திற்கு தனபால்தான் உரிமையாளர் என்று காட்டுவதற்குரிய எந்த ஆவணத்தையும் நான் பார்க்கவில்லை. தனபாலும் சொத்து சம்மந்தமான ஆவணம் எதையும் என்னிடத்தில் காட்டவில்லை. என்னுடைய லெட்ஜரில் கையெழுத்திட்டஆவணத்தை பதிவு செய்யும்பொழுது அந்த ஆவணத்தின் பதிவு எண்ணை மட்டும்தான் குறிப்பிட்டுள்ளேன். அதன் விவரங்களை நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மூன்று கிரையப் பத்திரங்கள் என்று குறிப்பிட்டு, அதன் பதிவு எண்களை குறிப்பிட்டுள்ளேன். எனது ரெஜிஸ்டரில் எந்த, எந்த வங்கியில் கையிருப்பு இருந்தது என்ற விவரத்தை நான் குறிப்பிடவில்லை என்றால், சரிதான். எனது 2021 லெட்ஜரில் சீரியல் நெம்பர் 5 ல் விவரங்களை மாற்றி, மாற்றி குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். ஆனால் அது தெரியாமல் நடந்த ஒன்றாகும். நான் கூறுவது தவறு என்றும், அது தெரிந்தே அவசரகதியில் நடந்த ஒன்று என்று சொன்னால் சரியல்ல. சீரியல் நெம்பர் 5 பதிவிற்கும், சீரியல் நெம்பர் 4 பதிவிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை. உயிலை நானும் படித்துப் பார்த்தேன். தனபாலையும் படித்துப் பார்க்கச் சொன்னேன். தனபாலுக்கும், அவரது முதல் மனைவிக்கும் இடையே நடந்த விவாகரத்து வழக்கு சம்மந்தமான ஆவணம் எதையும்

தனபால் என்னிடம் காட்டவில்லை. தனபாலுக்கு முதல் மனைவி மூலம் ஒரு மகன் இருக்கிறார் என்றால் சரிதான். தனபால் அதை உயிலிலும் குறிப்பிட்டுள்ளார். அந்த மகனின் பிறப்புச்சான்றிதழை என்னிடம் காண்பிக்கவில்லை. நானும் அதைக் கேட்கவில்லை. தனபால் உயிலில் கையெழுதிட்டபின் மற்றும் சாட்சிகள் இருவரும் கையெழுத்திட்ட பின்னர் நானும் கையெழுத்திட்டு சீல் வைத்தேன். அதை தவிர உயில் சம்மந்தப்பட்ட எந்த விவரமும் எனக்கு தெரியாது. நோட்டரி ஆவணத்தில் நான் கையெழுத்திடும்வரை 1 ஆம் பிரதிவாதி சரஸ்வதி தனபாலுடன்தான் இருந்தார். நான் செய்யும் வேலைகளையும் அவர் கவனித்துக் கொண்டுதான் இருந்தார். எனது லெட்ஜரில் பொதுவாக சாட்சிகளின் கையொப்பங்களை மட்டும்தான் பெறுவோம். விலாசங்களை வாங்குவதில்லை. என்னுடைய லெட்ஜரிலும் சாட்சிகளின் விலாசங்கள் குறிப்பிடவில்லை. உயிலில் தயாரித்தவர் யார் என்ற விவரமும் இல்லை என்றால் சரிதான். உயில் எத்தனை பக்கங்களில் தயாரிக்கப்பட்டிருந்தது என்று தற்போது எனக்கு நினைவில்லை. பார்த்தால்தான் கூறமுடியும். உயிலில் ஒவ்வொரு பக்கத்திலும் தனபாலின் கையொப்பம் மாறுபட்டு காணப்படுகிறது என்று சொன்னால், அவர்தான் கையொப்பம் செய்துள்ளார். என்னிடம் காண்பிக்கப்படும் கையெழுத்துக்களில் பெரிய வித்தியாசங்கள் எதுவும் தெரியவில்லை. லேசான வித்தியாசம்தான் தெரிகிறது. உயிலில் என்னுடைய முத்திரையானது வாசங்களின் மேலே வைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால், இடமின்மை காரணமாக அவ்வாறு இடப்பட்டுள்ளது. உயிலின் முதல் பத்தியில் ஒவ்வொரு வரிகளுக்கிடையே நிறைய இடைவெளி காணப்படுகிறது என்று சொன்னால் சரியல்ல. நான் கூறுவது தவறு என்றும், முதல் பத்தியின் வரிகளுக்கிடையே உள்ள இடைவெளியும், இரண்டாம் பத்தியின் வரிகளுக்கிடையே

உள்ள இடைவெளியும் மாறுபாடாக காணப்படுகிறது என்றும், நான் வழக்கிற்காக தவறாக சாட்சியம்ம அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. உயிலில் கடைசி வரிகளுக்கு பின்னிட்டு உள்ள சொத்து விவரத்தில் உள்ள வரிகளுக்கிடையே நிறைய இடைவெளி காணப்படுகிறது என்று சொன்னால் சரியல்ல. உயிலில் குறிப்பிடப்பட்டுள்ள செக்குபந்தி மற்றும் அளவீடு வரிகளுக்கிடையே நிறைய இடைவெளி காணப்படுகிறது என்றும் ஆனால் நான் வழக்கிற்காக இல்லை என்று தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. பொதுவாக புகைப்படத்திற்கு மேல்தான் கையொப்பம் இடுவார்கள் என்று சொன்னால் சரிதான். உயிலின் 6 ஆம் பக்கத்தில் பதிவு புத்தகத்தின் விவரம், எனது கையொப்பம் மற்றும் முத்திரைவில்லை ஒட்டப்பட்ட இடமும் மிகவும் நெருக்கடியான நிலையில் அமைந்துள்ளது என்று சொன்னால், போதுமான இடம் இல்லாததால் இருந்த இடத்தில் நான் அந்த விவரங்களை குறிப்பிட்டு முத்திரையிட்டுள்ளேன். உயிலில் தனபாலின் கையொப்பம் 1 முதல் 5 பக்கத்தில் ஒரே மாதிரியாக வலது பக்க ஓரத்தில் அமைந்துள்ளது என்று சொன்னால் சரிதான். மகனுடைய படிப்பு விவரங்களைப்பொருத்து சொல்லியுள்ள விவரங்களுக்கு ஆவணங்கள் எதாவது தனபால் காண்பித்தாரா என்றால் அதைப் பற்றி நான் தனபாலிடம் கேட்கவில்லை. நோட்டரி பதிவு செய்யும்பொழுது ரசீது கொடுப்பது வழக்கம். அதையும் நான் சீரியல் நெம்பர் 4 ல் நான் குறிப்பிட்டுள்ளேன். ஆனால் ரசீதின் அடிக்கட்டையை நான் தாக்கல் செய்யவில்லை. நீதிமன்றம் கூறினால் நான் தாக்கல் செய்கிறேன். அவரது மகன் தன்னை கவனித்துக் கொள்ளவில்லை என்றும், அவர் தன்னிச்சையாக இருக்கிறார் என்றும் என்னிடம் கூறியிருக்க வாய்ப்பில்லை என்றும், வழக்கிற்காக நானாக அவ்வாறு கூறியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. 1 ஆம்

பிரதிவாதியும், அவரது உறவினர்களும், நானும் முறைகேடாக உயிலை தயார் செய்துள்ளோம் என்று சொன்னால், சரியல்ல. உயிலில் நான் நோட்டரி கையெழுத்திட்டதைத் தவிர உயிலைப் பற்றிய வேறு எந்த விவரமும் எனக்குத் தெரியாது. 1 ஆம் பிரதிவாதிக்கு ஆதரவாக நான் தவறாக சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தனபால் 15-04-2021ல் என் முன்பாக ஆஜராகவில்லை என்றும், என் முன்பாக அவர் கையெழுத்து எதுவும் இடவில்லை என்றும், நான் கையொப்பம் செய்த உயில் போலியாக தயாரிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. போலியாகதயாரிக்கப்பட்ட உயிலில் நான் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளதால் எனது சாட்சியம் நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை.

ஒம்/ராமசந்திரன்,

Taken down by me/ typed down to my dictation in open Court, read over to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/G.Vijaya,
Principal District Judge,
Coimbatore.